**பஸ்பாகே கோரளை பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 முனைப்பழியள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தின் மீதி கணக்கின் பிரகாரம் ரூபா 14,431,934 ஆக இருந்த போதிலும் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் அது ரூபா 14,362,340 ஆக இருந்தமையால் ரூபா 69,594 ஆன வேறுபாடு கண்டறியப்பட்டது.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 14 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 24,220,827 தொகையாக இருந்ததுடன், அதில் 5 வருடங்களிற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,614,510 ஆக இருந்தது. இம் மீதியில் 2017 மே 30 இல் உள்ளவாறு ரூபா 23,187,064 ஆன மீதி மேலும் அறவிட வேண்டியிருந்தது.

**(ஆ) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 15,956,704 கூட்டுத்தொகையான 11 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் 5 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,329,259 ஆக இருந்தது. இம்மீதியில் 2017 மே 30 இல் உள்ளவாறு ரூபா 7,218,574 ஆன மீதி மேலும் அறவிட வேண்டியிருந்தது.

#### 1.3.3 கணக்காய்விற்கான தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

2 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத காரணத்தால் ரூபா **1,250,333** கூட்டுத்தொகையான

கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திரகமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 178 (10(2) ஆம் பிரிவு | சகல கேள்விதாரர்களுக்கும் தபால் மூலம் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட வேண்டிய போதிலும் அது தொடர்பாக வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) | 2014 ஆம் ஆண்டில் 3 சந்தர்ப்பங்களில் நிர்மாண ஒப்பந்தங்களுக்காக நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 25,907 தொகை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| (இ) | 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தி | கடைகளை உப குத்தகைக்கு வழங்குவது முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளதுடன் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் குத்தகையாளரின் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யப்பட வேண்டிய போதிலும் சபையின் 7 கடைகள் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,951,380 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,168,211 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 783,169 தொகையான அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 வீத வரி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி மீதி ரூபா 375,271 தொகையாக இருந்ததுடன் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பட்டியல் இடப்பட்டவை ரூபா 576,600 ஆக இருந்தது. இதில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவீடுகள் முறையே ரூபா 92,740 மற்றும் ரூபா 362,658 ஆக இருந்தன. இது 25 சதவீதமாகவும் 63 சதவீதமாகவும் காணப்பட்டன. 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 496,473 ஆன பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டதுடன், நிலுவை வருமான சேகரிப்பு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டன.

(ஆ) 5 வருடத்திற்கு ஒரு முறை மதிப்பீடு செய்து வீத வரி அறவிடப்பட வேண்டிய போதிலும் சபையினால் 2009 ஆம் ஆண்டின் பின்னர் புதிய மதிப்பீடு மேற்கொள்ளப்படாமல் பழைய மதிப்பட்டினை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டிற்கு வீத வரி பட்டியலிடப்பட்டிருந்தது.

**2.2.2 ஏனைய வருமானம்**

**அறிவித்தல் பதாகை கட்டணங்கள்**

2015 திசெம்பர் 11 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்கான விளம்பர அறிவித்தல் மற்றும் சுற்றாடல் தொடர்பான உப உறுப்புரைக்கு இணங்க அறிவித்தல் பதாகை கட்டணங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் சபை அதிகாரப் பிரதேசத்தில் அறிவித்தல் பதாகை கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 400,000 உம் முத்திரைக் கட்டணம் ரூபா 5,000,000 உம் அறவிடப்பட வேண்டியிருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) சபை நிதியத்திலிருந்து அபிவிருத்தி முன்மொழிவுகளை செயற்படுத்துதல்**

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) சபை நிதியத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது இனங்காணப்பட்டு செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 1,677,823 பெமதியான 11 செயற்திட்டங்கள் 3 சந்தர்ப்பங்களின் போது தலைமை அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 709,829 பெறுமதியான 3 செயற்திட்டங்களின் வேலைகள் 2016 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையினால் ஒவ்வொரு ஆண்டிற்குரிய சுய வருமான உழைக்கப்பட்ட வருமானத்திலிருந்து 30 சதவீதத்திற்கு மேற்பட்ட சதவீதம் அதிகாரச்சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 45,983,226 ஆன மீண்டெழும் வருமானத்தை உழைத்திருக்கையில் அதில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 2,213,343 தொகையான 5 சதவீதம் அளவிலான குறைந்த சதவீதமே பயன்படுத்தப்பட்டிருந்தன.

**(ஆ) சபை நிதியத்திலிருந்து அபிவிருத்தி முன்மொழிவுகளை செயற்படுத்துதல்**

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) இந்நிகழ்ச்சித்திட்டங்ககளின் கீழ் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த 14 செயற்திட்டங்களை சபையினால் 2016 யூன் 02 ஆந் திகதி அங்கீகாரத்திற்கு அனுப்பியிருந்ததுடன் அச்செயற்திட்டங்களிலிருந்து 2016 ஆகஸ்ட் 29 மற்றும் செப்தம்பர் 14 ஆந் திகதிகளில் 12 செயற்திட்டங்களுக்கு உள்ளுராட்சி அமைச்சினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் ரூபா 1,550,000 பெறுமதியான 11 செயற்திடங்களின் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 செப்தம்பர் 28 ஆந் திகதி சபையினால் ஒக்தோபர் மாதத்தில் செயற்படுத்துவதற்கு உத்தேசித்த ரூபா 1,951,797 பெறுமதியான 14 செயற்திட்டங்களுக்கு அங்கீகாரத்தை தருமாறு மீண்டும் கோரப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அச்செயற்திட்டங்கள் 14 இற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை**

2016 ஆம் ஆண்டில் காணி மற்றும் வீதிகள் நிர்மாண செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 31,600,000 ஆன நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 27,982,162 தொகை பயன்படுத்தப்படாமல் இச்செயற்பாடு முறையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டு முதல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 11 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன.

(ஆ) 2016 மே மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் சேதத்திற்கட்பட்ட பொது நூலக மண்டபத்தின் தளபாட உபகரணங்கள் மற்றும் 5000 புத்தகங்கள் என்பன பாதுகாப்பின்றி அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 22,269,045 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் உருப்படிகள் 22 ஐ சபைக்கு கையேற்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதேச சபைக்குரிய ரூபா 1,097,000 பெறுமதியான 20 மயான பூமிகளின் உரித்தைக் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 5 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 393,962 ஆன கடன் மீதிகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2017 மே 30 இல் உள்ளவாறு அம்மீதி ரூபா 384,392 மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம், திட்டங்களை அங்கீகரிக்கப்பதற்காக முன்னைய 7 ஆண்டுகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட 869 கட்டிட விண்ணப்பங்களில் 703 இற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 66 விண்ணப்பங்களுக்கே இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) நீர்மானி கொள்வனவிற்காக முத்திரையிடப்பட்ட விலை விபரங்களுக்காக கேள்வி அழைப்பொன்று விடுக்கப்பட்டிருந்த போதிலும், முத்திரையிடப்பட்ட 3 கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டு தொழில்நுட்ப மதிப்பட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு குறைந்த கேள்விதாரர் தெரிவுசெய்யப்பட்டு ரூபா 1,890,000 இற்கு நீர்மானிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### 3.4 விளைவற்ற / குறைப்பயனபாட்டிலான சொத்துக்கள்

2014 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 5,002,900 பெறுமதிக்கு சபை நிதியத்தைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த 1021 நீர்மானிகளில் ரூபா 2,254,000 பெறுமதியான 460 நீர்மானிகள் பொருத்தப்படாமல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி அளவிலும் நீர்மானிகள் விளைவற்ற வகையில் களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நீர்மானிகள் இல்லாத இணைப்புக்கள் 1535 இருந்த போதிலும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நீர்மானிகள் விளைவற்ற வகையில் களஞ்சியத்தில் காணப்பட்டன.

### 3.5 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சில்வாஸ் லேன்ட் வீதி மற்றும் வடிகாண் நிர்மாணத்திற்காக ரூபா 167,747 மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக செய்யப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 1:2:4 (19மி.மீ) கொங்கீரட் கலவையில் கொங்கிரீட் இடுவதற்கு மதிப்பிடப்பட்டிருந்த வீதியின் மேற்பகுதியை உடைத்து பரீட்சித்த போது உரிய தரத்தில் அல்லாமல் பலவீனமான கொங்கிரீட் கலவை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் வீதி மேற்றள மத்தியில் குறுக்காக கோடுகள் காணப்பட்டன. வடிகாணை தூரமாக இட்டமையால் நீர் வழிந்தோடுவதற்கு மேற்பகுதியின் 2 இடங்களை உடைத்து வீதியின் குறுக்கே 4 அங்குல 02 எஸ்லோன் குழாய் துண்டுகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ii) கொங்கிரீட் வீதி மேற்றளம் நடுப்பகுதி வரை செல்லக்கூடிய வகையில் 1'-6"x 1'- 6"x16" அளவிலான வடிகாண் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு சுற்றுபுரமாக நான்கு அங்குல நான்கு (4'x4') 12 மி.மீ சுற்றுக் கம்பி இடப்பட்டு சதுர வலை இடப்பட்ட காரணத்தினால் வீதியில் பயணம் செய்யும் பிரயாணிகளுக்கு இடையூராக இருந்தது.

(ஆ) பாரண்டா முதல் போஹில் வரை போஹில் மேல் வீதிக்கு கொங்கிரீட் இடுவதற்கு முன்னர் 461.7m$^2$ வீதியின் மேற்பரப்பிற்கு பொலித்தீன் இடுவதற்கு மதிப்பீடு செய்து அதற்காக ரூபா 32,319 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் வீதியின் மேற்றளத்திற்கு பொலித்தீன் இடப்பட்டிருக்கவில்லை.

(இ) தடுபந்திருப்ப கம்மெத வீதி 1:2:4 (19மி.மீ) கொங்கீரட் கலவை பயன்படுத்தி நிர்மாணிப்பதற்கு ரூபா 142,000 ஆன மதிப்பீட்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வீதியின் மேற்பரப்பை உடைத்து பரீட்சித்த போது அதன் கொங்கிரீட் உரிய தரத்தில் அல்லாமல் இலகுவாக உடையக்கூடிய மட்டத்தில் பலவீனமாக காணப்பட்டதுடன் 4" அங்குலத்தில் நிர்மாணிக்கப்பட வேண்டிய வீதி மேற்பகுதி 3" அங்குல தடிப்பில் காணப்பட்டது.

(ஈ) ஹெத்தடன் பகுதி வெஸ்ட் ஹோல் தோட்ட கெட்டபுலா வீதிக்கு கொங்கிரீட் இடுவதற்காக ரூபா 471,859 மதிப்பிடப்பட்டு கொங்கிரீட் வீதியின் மேற்றளத்திலிருந்துஆரம்ப முதல் 12.6 மீற்றர் தூரத்தில் குறுக்காக வெடிப்பேற்பட்டிருந்ததுடன் அவ்விதி 4" தடிப்பில் கொங்கிரீட் இடப்பட வேண்டிய போதிலும் வெடித்திருந்த இடத்தை உடைத்து பரிசோதித்த போது அதன் தடிப்பு 3" ஆக காணப்பட்டது. வீதியின் மேற்பரப்பில் 269.5 சதுர மீற்றர் அளவிற்கு பொலித்தீன் பரப்புவதற்கு ரூபா 5,983 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் பொலித்தீன் இடப்பட்டிருக்கவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி, மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடுகையில் 3 வருமான விடயங்களில் 43 சதவீதம் முதல் நூறு சதவீதம் வரை மிகைத்தும் 8 செலவின விடபங்களில் 24 சதவீதம் முதல் 79 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒவ்வொரு ஆண்டிலும் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக முன்னைய ஆண்டின் போது அபிவிருத்தி முன்மொழிவுகளைப் பெற்று முன்னுரிமை தயாரிக்கப்பட்டு எதிர்வரும் ஆண்டில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களுக்காக முறைப்படி தொழில்நுட்ப உத்தியோகர்களின் மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 2,700,000 அண்ணளவான பெறுமதியொன்று இட்டு சபை நிதியத்திற்கான அபிவிருத்தி மதிப்பீடுகள் தயாரித்து நிறைவேற்றப்பட்டிருந்தன.

### 4.2 வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டில் ரூபா 7,377,210 ஆன மூலதனச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கூட்டிணைந்த திட்டம்**

மீளாய்வாண்டிற்குரிய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின் போது போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஒப்பந்த நிருவாகம்
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்